***கவனிக்க.-*** *2021.09.17 ஆந் திகதிய 2246 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : I மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2247 - 2021 සැප්තැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2021.09.24**

*2247 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1353* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1350* | நானாவித அறிவித்தல்கள் | *1354* |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1349 - B 082271 - 5,403 (2021/09)

# ஆய விற்பனையும் குத்தகையும்

திருத்தம்

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவு**

**2021.08.23 ஆந் திகதியில் கோரப்பட்ட கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனையானது நிலவும் கோவிட் -19 தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், மீண்டும் பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் 2022 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை கோரல்**

2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 2 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2021.10.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் 5000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் படிவத்தின் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பெறுமதியில் 25% இற்கு மேற்பட்ட வருமானச் சொத்து சான்றுப்பத்திரத்துடன் பெயரிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2021.10.21ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2021.11.23ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் சுய உரித்தினைப் பெற்றுக் கொண்டாரென பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. எம். எல். எச்.திசாநாயக,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2021 .09.15.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை தொடர்பான விபரம் - 2022**

*(2022.01.01 ஆந் திகதி தொடக்கம் 2022.12.31 ஆந் திகதிவரை)*

| கள்ளுத் தவறணை யின் பெயர் மற்றும் முகவரி | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கப்படும் நேரம் | கள்ளுத் தவறணை மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| பதுளை இலக்கம் 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஆம் பிரிவின் ஹூணுகொடுவ எனும் அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2021.10.21 ஆந் திகதி மு. ப. 10.30 |

**மீண்டும் விற்பனை செய்யப்படும் திகதியும் நேரமும்:-** சிறந்த கொள்வனவாளர் முன்வரவில்லையெனில் 2021.11.23 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

9-193

---

திருத்தம்

**லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு**

**2021.08.25 ஆந் திகதியில் கோரப்பட்ட கள்ளுத் தவறணைக்களுக்கான குத்தகை விற்பனையானது நிலவும் கோவிட் -19 தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், மீண்டும் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் 2022 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை கோரல்**

2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்ட லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஒகத்து 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2021.10.26ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்தால் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதான குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரக் கட்டணத்தை செலுத்தி வருமான சான்றுப்பத்திரத்துடன் முகவரியிடப்பட்ட கடித உறையினுள் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள கள்ளுத் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும் போது கேள்விப் பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2021.10.26 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து

கேள்விதாரர்களும் லுணுகலை பிரதேச செயலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

5. யாதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அனைத்து கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2021.11.02ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவானதாயிருத்தல் வேண்டும்.

7.ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி.ப.2.00 மணிக்கு முன்னதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையினைச் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை லுணுகலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ.எம்.என்.திசாநாயக,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2021.09.15 .

**அட்டவணை**

**2022 ஆம் வருடத்திற்காகவென அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகள்**

லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு
**2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரை**

| தொடர் இல. | தவறணையின் பெயரும் முகவரியும் | பிரிவு | பி.செ.பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படு கின்ற நேரம் | தவறணை மூடப்படுகின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | இல.02 லுணுகலை | லுணு கலை | லுணுகலை பிரதேச சபையின் வட்டார இலக்கம் 02 வரிப்பண இலக்கம் 219 கொண்ட குருவிக்கும்புர வத்த | மு.ப11.00<br>பி.ப. 05.00 | பி.ப. 02.00<br>பி.ப. 08.00 | ரூபா.5000.00 | 2021.10.26<br>மு.ப. 10.30 |

மஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவுநேர சிற்றுண்டிச்சாலைக்கு 2022 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட முகாமையாளர் 2021.10.26 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கவாறு லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

9-194

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## ஒன்றிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) (ஆ) பிரிவுக்கு அமைவானது .-

சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிடட் மற்றும் அக்பார் பார்மசியூடிகல்ஸ் ( பிரைவேட்) லிமிடட் ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பதற்கான தீர்மானம் ஒன்றை சன்ஷயின் ஹெல்த்கெயா லங்கா லிமிடட் ( கம்பனி பதிவிலக்கம் பீபி 335) மற்றும் அக்பார் பார்மசியூடிகல்ஸ் (பிரைவேட்) லிமிடட் ( கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 11321) ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளது என்பதோடு அதன் மூலம் சன்ஷயின் ஹெல்த்கெயா லங்கா லிமிடட் மற்றும் அக்பார் பார்மசியூடிகல்ஸ் ( பிரைவேட்) லிமிடட் ஒரு தனிநிறுவனமாக ஒன்றிணைக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் சன்ஷயின் ஹெல்த்கெயா லங்கா லிமிடட் என்ற பெயரின் கீழ் தொடரப்படும்.

சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி அவர்களால் ஒன்றிணைத்தல் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ் ( பிரைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்.

சன்ஷயின் ஹெல்த்கெயா லங்கா லிமிடட்.

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ் ( பிரைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்.

அக்பார் பார்மசியூடிகல்ஸ் ( பிரைவேட்) லிமிடட்.

9-142

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 இற்கு ஏற்ப, 2021, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் ஹென்செல் டெக்ஸ்டைல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் அதன் பெயரை பிரைடன்பேர்க் எபரல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் என மாற்றிக் கொண்டுள்ளது என சொல்லப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர்* : ஹென்செல் டெக்ஸ்டில் லங்கா (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 18003
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல. 208 A/2, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை.
*கம்பனியின் புதிய பெயர்* : பிரைடன்பேர்க் எபரல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்

மெனேஜர்ஸ் என்ட் செக்ரெடரீஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.
பிரைடன்பேர்க் எபரல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்.

9-162

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 20/1, திஸ்ஸ பிளேஸ், P.B. அல்விஸ் மாவத்தை, கடுபெத்தை, மொறட்டுவை எனும் முகவரியில் வசிக்கும் மொனிகா சிறியானி பெரேரா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைவருக்கும் தெரிவிப்பதாவது, ஹர்ஷன கனிஷ்க ரணசிங்க எனும் பிரசித்த நொத்தாரிசினால் 28 ஆம் இலக்கத்தில் சான்றுப்படுத்தப்பட்டு 2019.12.25 ஆந் திகதி , இல. 622/4, கோட்டை வீதி, எதுல்கோட்டை, கோட்டையில் வசிக்கும் மைக்கல் செல்டன் பெரேரா, அவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மொனிகா சிறியானி பெரேரா.

9- 175

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீஎல்சீ - நுகேகொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

"கடன்பட்டோர்" என்ற வகையில் நுகேகொடையைச் சேர்ந்த சுமித் விஜேசிங்க ஏக்கநாயக்க மற்றும் நுகேகொடையில் தலைமை அலுவலக பதிவிலக்கம் என்(பீவீஎஸ்) 20493 இன்கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய M/S, ஓவின் கேஸ்சஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப் பட்ட சொத்து.

### 1 ஆவது ஏலவிற்பனை

வடமேல் மாகாணம், சிலாபம் மாவட்டத்தில், வட பிட்டிகல் கோரள, முன்னிஸ்வரம் பத்து ஹீனஹஸ்வில மற்றும் மாதம்பே தெமட்டபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பயிர்த்தோட்டம், மணல் மற்றும் அனைத்தையும் கொண்ட "ஹீனஹஸ்வில எஸ்டேட்" என்று அழைக்கப்படுகின்ற காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். பெரேரா என்பவரால் 27.04.1959ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல.5533 துண்டு A எனக் குறிப்பிடப்பட்டு அறியப்பட்ட காணி முப்பது ஏக்கர் (30ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2021, ஒற்றோபர் 28ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ நுகேகொடை கிளை வளாகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- சிலாபத்திலிருந்து கொழும்பு வீதி மார்க்கமாக காக்காபள்ளி சந்திவரை சென்று அங்கு உள்ள 46 ஆவது மைல் போஸ்ட்டின் இடதுபக்கமாக உள்ள மெதகம வீதியால் 4 ஆவது மைல் போஸ்ட் வரை சென்று அங்கிருந்து 50 மீற்றர் தொடர்ந்து சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடதுகைப் பக்கத்தில் அமைந்திருக்கும்.

### 2 ஆவது ஏலவிற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரள, பல்லேபத்து கோட்டே நகரசபை எல்லைக்குட்பட்ட நுகேகொடையில் பொதுவாக ஸ்டேசன் வீதி என்று அழைக்கப்பட்ட ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையில் அமைந்துள்ள அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பயிர்த்தோட்டம், மணல் மற்றும் அனைத்தையும் கொண்ட "கொட்டனுவே கும்புர" என்று அழைக்கப்படுகின்ற காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்கார என்பவரால் 02.09.1979 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1507 துண்டு 4A1 எனக் குறிப்பிடப்பட்டு அறியப்பட்ட காணி இருபத்துமூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணத்தை நில வரைபட இல. 1507 கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2021, ஒற்றோபர் 28ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ நுகேகொடை கிளை வளாகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- நுகேகொடையிலுள்ள நிற மின் விளக்குகள் இடத்திலிருந்து ஸ்டேன்லி மாவத்தை மார்க்கமாகப் புறப்பட்டு சுமார் 300 மீற்றர் தொலைவில் வரிமதிப்பீட்டிலக்கம் 221, ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையின் இடதுகைப் பக்கத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.04.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.04.07 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2014.04.04 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1%) (ஒரு வீதம்) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000 ரூபா, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 1500 ரூபா; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட் களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும்.

தொ.பே. 2456479, 2456481.

துசித கருணாரத்ன (ச.நீ),
அனுமதி பெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

9- 91

**மக்கள் வங்கி - பதுளை (முதியங்கன) கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

*பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏல விற்பனை*

***காணித்துண்டம்*** - *மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை பள்ளேபத்துவில் தெஹிவல- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லையினுள்ளான 2 ஆம் வட்டாரத்தில் களுபோவிலயில் அமைந்துள்ள துட்டுகெமுனு வீதியில் 190/3 ஆம் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதும், "கஹட்டகஹலந்த மறுபெயர் கஹட்டகஹவத்த, துன்ஹவுல் குருந்துவத்த மற்றும் ஹெடவக்ககஹவத்த" எனவழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். அனில் பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, பெப்புருவரி 25 ஆந் திகதிய 1049 A ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதுமான B1A எனும் காணித்துண்டு.*

***காணியின் விஸ்தீரணம்***: *கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து பதின்மூன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்(0ஏ.0றூ. 13.75பே.).*

*மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், நுகேகொடை (கொழும்பு வெளிப்புறம்), பிராந்திய தலைமை அலுவலக மக்கள் வங்கியில் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.*

*ஏல விற்பனையானது கொவிட் -19 நடப்பொழுங்குக்கு இசைந் தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டு நெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.*

***தீர்மானப் பற்றிய அறிவித்தலுக்காக***-*2013.01.11ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013.01.17ஆந் திகதிய "தினமின", "டெய்லி நிவுஸ் " மற்றும் "தினகரன்" பத்திரிகை களையும் பார்க்கவும்.*

***ஆதனத்துக்கான அணுகுவழி***.- *கொஹுவல சந்தியிலிருந்து துட்டுகெமுனு வீதியில் ( கொழும்பு - ஹொரணை பிரதான வீதி) பாமன்கட நோக்கி சுமார் 200 மீற்றர் செல்லும் போது கொஹுவல பொலிஸ் நிலையத்தைக் கடந்ததும் இடப்பக்கமாக பீற்றர் டீ பெரேரா மாவத்தைக்குத் திரும்பி சுமார் 40 மீற்றர் செல்கையில் இடது பக்கத்தில் அவ்வீதியில் முன் நீண்டிருக்கும் இந்த ஆதனத்தைக் காணலாம்.*

***கொடுப்பனவு செய்யும் முறை***.- *ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகக் செலுத்த வேண்டும்.-*

*(1) கொள்வனவு விலையில் 10%;*
*(2) உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை சபை வரி 1%வரி ;*
*(3) விற்பனை விலையின் (2 1/2%) இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏல விற்பனையாளர் தரகு ;*
*(4) எழுது வினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1,000 ரூபா;*
*(5) விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும் ;*
*(6) விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்;*

*கொள்வனவு விலையின் மீதி 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம், இல. 24, ஆர். எச். குணவர்தன மாவத்தை, பதுளை எனும் முகவரிக்குச் செலுத்தப்படல் வேண்டும்.*

*தொலைபேசி இல. 055- 2222165, 2222342, 2223067, 2223068.*
*தொலைநகல்: 055- 2222361.*

*சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரித்துடையதாகும்.*

*உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*முன்னறிவித்தலின்று விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான சலீன் உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.*

*ஈ.எஸ். ராமநாயக்க,*
*நீதிமன்றஆணையாளரும்,*
*உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும் ,*
*மதிப்பீட்டாளர் மற்றும் (அகில இலங்கை சமாதான நீதவான்).*

*இல. 11/55, போகஹவத்த,*
*குடாபுத்கமுவ, அங்கொடை.*

*தொலைபேசி இல.: 011- 2053286, 072- 3207533, 076- 9217329.*

*9- 171*

### மக்கள் வங்கி - மஹியங்கனை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏல விற்பனை

***காணித்துண்டம்*** - மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கந்த பஹல கோரளே மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவில் அம்பகஹபெலஸ்ஸ கிராம அலுவலர் பிரிவிலுள்ள அம்பகஹபெலஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ளதும், "அம்பகஹபெலஸ்ஸய" என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் ரி. பீ. எஸ். சங்கரந்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.04.11 ஆந் திகதிய 3686 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதுமான 01 C எனும் காணித்துண்டு.

***காணியின் விஸ்தீரணம்***: கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு ஏக்கர் , இரண்டு றூட் மற்றும் இருபத்தொன்பது பேர்ச்(01ஏ.2றூ.29பே.).

மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மஹியங்கனை மக்கள் வங்கிக் கிளையில் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏல விற்பனையானது கொவிட் -19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையானவழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக***.- *2019.02.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.02.08 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நிவுஸ் " மற்றும் "தினகரன்"பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***ஆதனத்துக்கான அணுகுவழி***.- மஹியங்கனை நகரத்திலிருந்து செல்லும் போது கண்டி நகரத்திலுள்ள பாலத்தைக் கடந்ததும் இடப்பக்கமாக றந்தெனிகல வீதியில் 13 கி.மீ. எனும் மைற்கல்லைத் தாண்டும் போது வீதியின் வலப்புறமாக இவ்வாட்களின் வதிவிட வீடு, நெல் ஆலை மற்றும் நெல் களஞ்சியசாலை என்பன அமைந்துள்ளன. இவை பிரதான வீதிக்கு முகப்பாக உள்ளன.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகக் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% ;
(3) விற்பனை விலையின் (2 1/2%)(இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏல விற்பனை யால்த்தரகு;
(4) எழுது வினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1,000 ரூபா;
(5) விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும் ;
(6) விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்;

கொள்வனவு விலையின் மிதி 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம், இல. 24, ஆர். எச். குணவர்தன மாவத்தை, பதுளை எனும் முகவரிக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

தொலைபேசி இல. 055- 2222165, 2222342, 2223067, 2223068.
தொலைநகல்: 055- 2222361.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்று விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்றஆணையாளரும்,
உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும் ,
மதிப்பீட்டாளர் மற்றும் (அகில இலங்கை சமாதான நீதவான்).

இல. 11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொடை.
தொலைபேசி இல.: 011- 2053286, 072- 3207533, 076- 9217329.

9- 172